# சாக்கடை உட்பட கண்ட கண்ட இடங்களில் குப்பைகள்

## வியாபாரிகளுக்கு 50 சம்மன்கள்

### கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடவடிக்கை



கோலாலம்பூர், ஜூலை 6- தாமான் புக்கிட் அங்கிரிக், கோலாலம்பூரில் உள்ள வர்த்தகப் பகுதிகளில் தூய்மை அமலாக்க நடவடிக்கையின்போது கோலாலம்பூர் மாநகர் மன்றம் 50 சம்மன்களை வெளியிட்டது. அனுமதியின்றி பொது இடத்தில் வியாபாரப் பொருட்களை வைத்தது, சாக்கடை உட்பட கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை வீசியது, பல்வேறு கழிவுப் பொருட்களால் நீரோட்டத்தைத் தடுத்தது ஆகிய குற்றங்களுக்கு இந்த சம்மன்கள் வெளியிடப்பட்டன.

சம்பந்தப்பட்ட தரப்பினரைத் தண்டிப்பதற்காக மட்டும் இந்த சம்மன்கள் வெளியிடப்படவில்லை. மாறாக தூய்மையைப் பாதுகாப்பது கூட்டுப் பொறுப்பு என்பது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தூய்மையைப் பாதுகாப்பது ஊராட்சித் தரப்பினரின் பொறுப்பு மட்டுமல்ல, அது கூட்டுப் பொறுப்பு என்று டிபிகேஎல் வெளியிட்ட அறிக்கை கூறியது.

பாதசாரிகள் பயன்படுத்தும் பாதைகளில் வியாபாரப் பொருட்களை வைத்த சில வியாபாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் நடைபாதைகளில் வியாபாரப் பொருட்களை வைப்பதால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டியது. வியாபாரக் கடைகளில் தூய்மையைப் பேணிக்காப்பதில அலட்சியம் காட்ட வேண்டாம் என அனைத்து வியாபாரிகளையும் டிபிகேஎல் நினைவுறுத்தியது. வியாபாரம் செய்வோர் தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.அது அவர்களின் பொறுப்பு என்றும் அது கூறியது. வியாபார இடங்களில் அல்லது கடைகளில் தூய்மையைப் பேணிக்காப்பதில் யாரும் ஒருபோதும் அலட்சியம் காட்டக்கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.